22.01.2026 MCOP No.106/2019

சாட்சி : PW 1 முத்து

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**:

1. முதல் தகவல் அறிக்கை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2. TN 20BU 5310 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3. TN 65 AC 7120 என்ற பதிவு எண் கொண்ட Pulsar என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
4. விடுவிப்பு அறிக்கை **அசல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
5. மருத்துவரின் பிரிஸ்கிரிப்சன் **அசல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
6. மெடிக்கல் பில்கல் **அசல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

   மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்

**3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்த போது தெற்கு இருந்து வடக்கு நோக்கி சென்று கொண்ருந்தேன் என்றால் சரிதான். பின்னால் வந்து கொண்டிருந்த வண்டிக்கும் எனது வண்டிக்கு எவ்வளவு துாரம் இருந்தது என்றால் நான் கவனிக்கவில்லை, அடித்தது மட்டும் தான் தெரியும். நான் பின்னால் வந்த வண்டியை கவனிக்காமல் நான் இடது புறமாக திரும்பி விபத்தை நானே ஏற்படத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனது வண்டிக்கு சைடில் கண்ணாடி இருந்ததா என்றால் இருந்தது. விபத்தின் போது நான் தலைக்கவசம் அணியவல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இருந்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருப்பேன் என்றால் என்னிடம் உள்ளது. எனது இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா இல்லை. பல்சலர்

வாகனத்தை ஓட்டிய சிவாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் மருத்துவ மனையில் உள்நோயாளியாக இருந்த போது மேற்கொண்ட சிகிசிச்கைக்கு மொத்தமாக பில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் மொத்த பில்களை தவிர்த்து தனித்தனியாக அத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருந்து பில்கள் மொத்த பில்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மருத்துவ செலவுகள் கூடுதலாக போட்டு மருத்துவரிடம் ரசீது வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. நான் மாத வருமானம் ரூ.15,000/- போட்டுள்ளது மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு விபத்திற்கு பிறகு காயங்கள் சரியாகி பழைய நிலைக்கு திரும்பி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனது பங்களிப்பும் உள்ளதால் இந்த எதிர்மனுதாரர் எந்த வித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அவருடை ஆர்சி புத்தகம் காலாவதியாகிவிட்டது என்றும் எனவே நான் 1, 2 எதிர்மனுதாரரிடம் தான் இழப்பிடு கோர முடியும் என்றும் இந்த எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் திருவாடானை நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. அதுபோல அந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.